Dinathanthi 28.01.24

பல்கலைக்கழக மானியக்குழுவின் பட்டியலில்

# கல்வி நிறுவனங்களை சேர்க்க புதிய விதிகள்

## யு.ஜி.சி. செயலாளர் தகவல்

சென்னை, ஜன.28-

பல்கலைக்கழக மானியக்குழு (யு.ஜி.சி.) சட்டம், 1956-ன் பிரிவு 12பி-ன் கீழ் கல்வி நிறுவனங்கள் யு.ஜி.சி. பட்டியலில் சேர்க்கப்படுகின்றன. இதற்காக கல்வி நிறுவனங்களில் இருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருகின்றன. அவ்வாறு பெறப்படும் விண்ணப்பங்களை யு.ஜி.சி. பரிசீலித்து, யு.ஜி.சி.யின் 1975-ல் உள்ள விதிகளின்படி (மானியங்களுக்கான நிறுவனங்களின் தகுதி) பிரிவு 12பி-ன் கீழ் கல்லூரிகள் பட்டியலில் சேர்க்கப்படுகின்றன.

இந்த நிலையில் யு.ஜி.சி.யின் இந்த விதிகள் மாற்றப்பட்டு, புதிய விதிகள் தயாரிக்கப்பட்டு இருப்பதாக யு.ஜி.சி. அறிவித்துள்ளது. இதுதொடர்பாக யு.ஜி.சி.யின் செயலாளர் மனீஷ் ஆர்.ஜோஷி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

1956-ம் ஆண்டின் பல்கலைக்கழக மானியக்குழு சட்டம் பிரிவு 25-ல், 12பி பிரிவில் உள்ள அதிகாரங்களை பயன்படுத்தி இந்திய அரசாங்கத்தால் பல்கலைக்கழக மானியக்குழுவின் பட்டியலில் கல்லூரிகளை சேர்க்க விதிகள் இருக்கிறது.

'தேசிய கல்வி கொள்கை 2020' நடைமுறைப்படுத்தப்பட்டதில் இருந்து நாட்டில் உயர்கல்வி, பெரும் மாற்றத்தை சந்தித்து வருகிறது. அந்தவகையில் தேசிய கல்வி கொள்கையில், யு.ஜி.சி.யின் பட்டியலில் கல்லூரிகளை சேர்ப்பதற்கான விதிகளை சீரமைப்பதற்காக, அதன் முந்தைய விதிகளை திருத்த முடிவு செய்து, வரைவு பல்கலைக்கழக மானியக்குழு (மானியங்களை பெறுவதற்கான கல்லூரிகளின் தகுதி) விதிகள் 2024-ஐ யு.ஜி.சி. தயாரித்து இருக்கிறது. இந்த புதிய விதிகள் குறித்த கருத்துகள் வரவேற்கப்படுகின்றன. அதுபற்றி கருத்துகள் தெரிவிக்க விரும்புபவர்கள் suggestions.collegesregulation@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம்.

இவ்வாறு அதில் அவர் கூறியுள்ளார்.